**பயன்கள், சந்தா நிபந்தனைகள், கால அளவு, பயனீட்டு அளவு குறித்த சுருக்கமான விளக்கம்.**

| திட்டத்தின் கீழ் உள்ள பயன்கள | தகுதிக் கட்டுப்பாடு | பயனின் கால அளவு மற்றும் பயனீட்டு அளவு |
|---|---|---|
| 1. நோய் கால பயன் | சம்பந்தப்பட்ட ஆறு மாத சந்தா காலத்தில் 78 நாட்களுக்கான சந்தா தொகை செலுத்தியிருக்க வேண்டும் | இரு தொடர்ந்து வரும் பயனீட்டு காலத்தில் 91 நாட்கள் வரை, சராசரி தினசரி ஊதியத்தில் 70% வழங்கப்படும். |
| (ஆ) மிகைப்படுத்தப்பட்ட நோய் கால பயன் | மேற்கூறியபடி | 14 நாட்கள் ட்யூபக்டமி கருத்தடைக்கும் & 7 நாட்கள் வாசக்டமி கருத்தடைக்கும் சராசரி தினசரி ஊதியத்தில் 100% வழங்கப்படும். மருத்துவ ஆலோசனையின் பேரில் நீடிக்கக்கூடியது. |
| (இ) நீட்டிக்கப்பட்ட நோய் கால பயன் | தொடர்ந்து 2 ஆண்டுகள் பணி செய்திருத்தல் வேண்டும். தொடர்ச்சியான நான்கு பங்களிப்பு காலங்களில் குறைந்த பட்சம் 156 நாட்களுக்கு நான்கு பங்களிப்பு தொகை செலுத்தியிருக்க வேண்டும். (34 குறிப்பிட்ட நீண்ட கால நோய்களுக்கு மட்டும்) | நோய் கால உதவித் தொகை முதலில் மூன்று வருட காலத்தில், 309 நாட்களுக்கும், மருத்துவ ஆலோசனையின் படி நீட்டிக்கபட்ட நோய்களுக்கு 730 நாட்கள் வரை தினசரி சராசரி ஊதியத்தில் 80% வழங்கப்படும். |
| 2. ஊன உதவி பயன்கள் | | |
| (அ) தற்காலிக ஊன பயன்<br>(i) தொழில்சார் காயம் | காப்பீட்டாளராக சேர்ந்த முதல் நாளிலிருந்து, தொழில்சார்ந்த காயங்களுக்கு மட்டும். | தற்காலிக ஊனம் முடியும்வரை 90% சராசரி ஊதியம் வழங்கப்படும். |
| (ii) தொழில்சார் நோய் | இ.எஸ்.ஐ. சட்டம் 1948, 3வது அட்டவணையின் படி அனைத்து தொழிலசார் நோய்களும், சிறப்பு மருத்துவக் குழுவின் பரிந்துரையின்படி தொழில்சார் நோய் என முறைப்படுத்தப்படும். | மேற்கண்டவாறு |
| (ஆ) நிரந்தர ஊன பயன் | மேற்கூறியபடி | ஆயுள் முழுவதுமாக, முழுமையான நிரந்தர ஊனம் ஏற்படின் சராசரி தினசரி ஊதியத்தின் 90% விழுக்காடும், பகுதி இயலாமை ஏற்படின், ஊதியத்திறன் இழப்பு அடிப் படையிலும் வழங்கப்படும். |
| 3. சார்ந்தோர் உதவி-பயன் | காப்பீட்டாளராக சேர்ந்த முதல் நாளிலிருந்து, தொழில் சார்ந்த விபத்தினால் இறப்பு நேர்ந்திருக்க வேண்டும். | சார்ந்துள்ள பெற்றோர் களுக்கும், விதவைக்கு வாழ் நாள் முழுவதும் (மறுமணம் செய்யும் வரை), ஆண் குழந் தைகளுக்கு 25 வயது வரையும், பெண் குழந்தைகளுக்கு திருமணமாகும் வரையும், தினசரி சராசரி ஊதியத்தில் 90%-ல், விகிதாச்சார அடிப் படையில் பகிர்ந்தளிக்கப்படும். |
| 4. பேறுகால உதவி-பயன் | சம்பந்தப்பட்ட சந்தா காலத்தில் குறைந்தபட்சம் 70 நாட்கள் சந்தா தொகை செலுத்தியிருக்க வேண்டும். | மகப்பேறு காலத்தில் 26 வாரங்களும் கருச்சிதைவு அடைந்தால் 8 வாரங்களும் (மருத்துவ அறிவுரையின் படி மேலும் 4 வாரங்களுக்கு நீட்டிக்கத்தக்கது). உதவித் தொகை வழங்கப்படும். இரண்டிற்கும் மேல் குழந்தைகளிருப்பின், 12 வாரங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். உதவி தொகையானது தினசரி ஊதியத்தில் 100% வழங்கப்படும். |
| 5. மருத்துவ உதவி<br>ஆங்கில முறை மருத்துவத்துடன், ESI கழகம், இந்திய மருத்துவ முறைகளான, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, யோகா, ஹோமியோபதி (Ayush) முறைகளிலும் மருத்துவ உதவி வழங்கி வருகின்றது. இவ்வசதியானது நாடு முழுவதுமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 95 ESI மருத்துவமனைகளிலும் / மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும். | காப்பீட்டாளரான முதல் நாளிலிருந்தே, முழுமையான மருத்துவ உதவி பெற காப்பீட்டாளரும் அவரது குடும்பத்தினரும் தகுதி ஆனவர்கள். காப்பீட்டாளரின் மனைவி, 18 வயது பூர்த்தியடையாத குழந்தைகள் (கல்வி பெற்று கொண்டு இருப்பின் 21 வயது) சார்ந்த திருமணமாகாத பெண் குழந்தைகள், பலவீனமான குழந்தைகள், சார்ந்த பெற்றோர், இவர்கள் அனைவரும் காப்பீட் டாளரின் குடும்பத்தினராவர். மேலும், திருமணமாகாத காப்பீட்டு நபரினை சார்ந்த தம்பி / தங்கை / (பெற்றோர் உயிருடன் இல்லாதிருத்தல் வேண்டும்) போன்றோரும் குடும்பத்தினராவர். | ஊனமுற்ற காப்பீட்டு நபருக்கும் / அவரது குடும்பத்தினருக்கும், ஊனமானது சரியாகும் வரை முழுமையான மருத்துவ வசதி வழங்கப்படும். காப்பீட்டாளர் வயது மூப்பின் காரணமாகவோ, அல்லது பணி ஓய்வு திட்டம் மூலமாக விருப்ப ஓய்வு பெற்றிருந்தாலோ அல்லது தொழில்சார்ந்த காயத்தினால் பணியினை தொடர இயல வில்லை. எனில் ESI மருத்துவ வசதி பெறலாம். காப்பீட்டாளர் மற்றும் மனைவிக்கு வருடம் ஒன்றிற்கு ரூ.120/- சந்தா செலுத்தி இப்பயன் பெறலாம். |
| இதர பயன்கள் | | |
| பிரசவ செலவுகள் | காப்பீட்டாளரான நாள் முதல் காப்பீட்டாளரோ / காப்பீட்டாளரின் மனைவியோ ESI வசதியில்லாத இடத்தில் பிரசவிக்க நேர்ந்தால் பிரசவ உதவி வழங்கப்படுகிறது. | இரண்டு பிரசவங்களுக்கு மட்டும். தலா ரூ.5,000/- வழங்கப்படும். |
| ஈமச்சடங்கு செலவுகள் | காப்பீட்டாளரான நாள் முதல் ESI ன் பயனில் ஏதாவது ஒரு பயன் பெற தகுதியுள்ளவராக இருத்தல் வேண்டும். | ஈமச்சடங்கு செய்த தொகை அல்லது அதிக பட்சமாக ரூ.10000/- |
| வேலை இழப்பு உதவித் தொகை (RGKY) | தொழிற்சாலைகள் நிரந்தரமாக மூடப்படுதல் / தொழில்சாராத காப்பீட்டாளரின் சொந்த காரணங்களினால் ஏற்படும் விபத்தினால் உண்டான நிரந்தர உடல் திறன் இழப்பு, ஆட்குறைப்பு போன்ற காரணங்களினால் ஏற்படும் பணியிழப்பிற்கு முன் இரண்டு வருட சந்தா தொகையினை செலுத்தி யிருக்க வேண்டும். | ஆயுள் காலத்தில் அதிக பட்சமாக 24 மாதத்திற்கு, தினசரி ஊதியத்தில் 50% 1 முதல் 12 மாதங்களுக்கும். 25% கடைசி 12 மாதங்களும் வழங்கப்படும். |
| தொழிற்கல்வி பயிற்சி | தொழிற்சார் காயங்களால் ஏற்பட்ட உடல் திறன் குறைபாடு / உடல் ஊனம் | தொழிற்கல்வி காலம் முடியும்வரை. உதவித்தொகை பயிற்சிக்கான கட்டணம் அல்லது ஒரு நாளைக்கு ரூ.123/- இதில் எது அதிகமோ அத்தொகை வழங்கப்படும். |
| உடல் திறன் மேம்பாட்டு பயிற்சி | மேற்கூறியபடி | செயற்கை உறுப்பு மையத்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் காலம் வரை உதவித் தொகையாக தினசரி சராசரி ஊதியத்தில் 100 % வழங்கப்படும். |
| தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி | மேற்கூறியபடி | அதிக பட்சமாக 12 மாதங்கள். |
| **MBBS, BDS** மருத்துவப் பட்டப்படிப்புக்கான இட ஒதுக்கீடு | காப்பீட்டாளரின் குழந்தைகள், ESIC தலைமையகம் **www.esic.nic.in** என்ற இணைய தளத்தின் வாயிலாக அறிவிக்கும் தகுதிகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில், ESIC மருத்துவ நிறுவனங்களில் ஒதுக்கீடு வழங்கப்படும். | காப்பீட்டாளின் குழந்தைகளுக்கு **MBBS, BDS** படிப்பிற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரர்கள் நீட் **(NEET)** தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். |

**பொது மக்கள் குறை தீர்ப்பு**

இ.எஸ்.ஐ கார்ப்பரேஷன் தனது தலைமையகம்/ மண்டல அலுவலகம்/ சார் மண்டல அலுவலகம்/ கிளை அலுவலகம்/ இ.எஸ்.ஐ.மருந்தகங்கள்/ இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் "பொது மக்கள் குறை தீர்ப்பு முறைமை" அமைத்துள்ளது. இ.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் காப்பீட்டாளர்கள் குறைகளை உடனுக்குடன் தீர்வு காண்பதற்காக இ.எஸ்.ஐ கார்ப்பரேஷனில் பல்வேறு செயல்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தலைமையகத்தில் இலவச உதவி தொலைபேசி எண்.1800-11-2526 மற்றும் கோவை சார் மண்டல அலுவலகத்தில் இலவச தொலைபேசி எண். 1800 – 425 - 1897 அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கீழ்காணும் உதவி இணைப்புகளும் கோவை சார் மண்டல அலுவலகத்தில் பல்வேறு மட்டத்தில் உள்ள அலுவலர்களின் தொலைபேசி எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

புகார் அலுவலரின் விபரங்கள் (கோவை சார் மண்டலம்)

**I. இ.எஸ்.ஐ.சி. கிளை அலுவலகங்களின் பணப்பயன்கள் குறித்த புகார்களுக்கு:-**

| அலுவலர் & முகவரி | தொ.பே.எண் | மின் அஞ்சல் முகவரி |
|---|---|---|
| பொது மக்கள் குறைதீர் அதிகாரி<br>துணை இயக்குநர் (பயனீட்டுப்பிரிவு)<br>இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷன்,<br>சார்மண்டல அலுவலகம்,<br>1897, திருச்சி சாலை, கோவை-45. | 0422-2362315 | dir-kovai@esic.in |
| II. கோவை சார் மண்டல இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் மருத்துவப் பயன்கள் குறித்த புகார்களுக்கு : - இ.எஸ்.ஐ.மருந்தகம் குறித்த அனைத்து புகார்களுக்கும் | | |
| மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்<br>இ.எஸ்.ஐ.மருந்தக வளாகம்<br>திருச்சி பாதை, சிங்காநல்லூர்,<br>கோவை – 641 015. | 0422 - 2595078 | ramo-coimbatore.tn@esic.in |
| இ.எஸ்.ஐ.மருத்துவமனை, கோவை தொடர்பான அனைத்து அலுவலர் & முகவரி | | |
| மருத்துவ கண்காணிப்பாளர்<br>இ.எஸ்.ஐ.மருத்துவமனை,<br>வரதராஜபுரம், கோவை-641 015 | 0422-2574394 | ms-coimbatore.tn@esic.in |
| தமிழகம் முழுவதுமான மருத்துவம் சார்பான அனைத்து புகார்களுக்கும் | | |
| மாநில முதுநிலை மருத்துவ ஆணையாளர்,<br>இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷன் மண்டல அலுவலகம், 143, ஸ்டெர்லிங் ரோடு,<br>நுங்கம்பாக்கம், சென்னை – 600 034. | 044-28267080 | ssmc-tn@esic.in |

**குறை தீர் மன்றம்**

வாய்மொழி, எழுத்துப்பூர்வ புகார்கள்/ஆலோசனைகள் மற்றும் குறைகள் தீர்வு காண மண்டல அலுவலகம்/ சார் மண்டல அலுவலகம் இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷன் மருத்துவமனைகளில் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை மற்றும் இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷன் கிளை அலுவலகங்களில் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமை சுவிதா சமகம் (குறை தீர் மன்றம்) முறையாக செயல்பட்டு வருகின்றது

**மேலும் விபரங்களுக்கு**

இணையதளம் : www.esicoimbatore.org / www.esic.nic.in

இலவச தொலைபேசி எண் : 1800–425–1897

வடிவமைத்து வழங்கியது

**தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம்**

**சார் மண்டல அலுவலகம்**

பஞ்சதீப் பவன், 1897, திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோவை – 641 045.

மின்னஞ்சல் : dir-kovai@esic.in, தொலைபேசி : 0422–2362301

IP our VIP

ESIC - 2.0 Chinta Se Mukti

# இந்திய இ.எஸ்.ஐ. திட்டம்

## 65 வருட கால உன்னத சேவையில் இ.எஸ்.ஐ.சி.







## EMPLOYEES' STATE INSURANCE CORPORATION

## தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம்

**(சார் மண்டல அலுவலகம்)**

(மத்திய தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம், இந்திய அரசு)
பஞ்சதீப் பவன், 1897, திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோவை – 641 045.
தொலைபேசி : 0422–2362301 – 329 பேக்ஸ் : 0422–2315970
மின்னஞ்சல் : dir-kovai@esic.in,
இணையதளம் : www.esicoimbatore.org

இ.எஸ்.ஐ.சி. தன்னிகரற்ற காப்பீட்டு கழகம்

## உங்கள் திட்டத்தை அறிந்து கொள்வோம்

தொழிலாளர் அரசு காப்பீடு திட்டமானது காப்பீடு உள்ள நபர்களுக்கு நோய் காலம், பேறுகாலம், வேலையின் காரணமாக காயமுற்ற இயலாமை / மரணம், மருத்துவ ஈம சடங்கு செலவு காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கான தொழிலாளர் நலனுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த சமூக காப்பீட்டு திட்டம். அதுவே இ.எஸ்.ஐ சட்டம், 1948. பத்து அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்களை வேலையில் அமர்த்தும் தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களான சாலை போக்குவரத்து, உணவகங்கள், உணவு விடுதிகள், திரையரங்கங்கள், செய்தி நிறுவனங்கள், கடைகள், தனியார் கல்விக் கூடங்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள், பாதுகாப்பு மற்றும் இதர தொழிலாளர்களின் முகவர்கள், மற்றும் கட்டிட தொழில் முகவாண்மையகங்களுக்கும் இத்திட்டம் பொருந்துவதாகும். மாதம் ரூ.21000/- வரை ஊதியம் (மிகை நேர ஊதியம் நீங்கலாக) பெறும் மேற்காணும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. சட்டப்படி சமூகப் பாதுகாப்பு பயன்கள் பெற உரிமையுள்ளவர்களாவர்.

தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்களின் சந்தா / பங்களிப்பு தொகை மூலம் இ.எஸ்.ஐ. திட்டத்திற்கு நிதி பெறப்படுகிறது. தொழிலாளர்களின் ஊதியத்தில் தொழிலதிபர்கள் 4.75% (சதவிகிதம்) மற்றும் தொழிலாளர்கள் 1.75% (சதவிகிதம்) செலுத்தவேண்டும். ரூ.100க்கு குறைவாக தினக் கூலி பெறும் தொழிலாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிலதிபர்களின் சந்தா 4.75% (சதவிகிதம்) செலுத்தவேண்டும்.

6.10.2016 முதல் புதிதாக அமலாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் இரண்டு வருட காலத்திற்கு தொழிலதிபர்களின் சந்தா 3 % எனவும் தொழிலாளர்களின் சந்தா 1% என மொத்தம் 4% மட்டும் செலுத்தினால் போதும்.

## கோவை சார் மண்டலத்தில் இ.எஸ்.ஐ. திட்டம்

முதன்முதலில் இ.எஸ்.ஐ. திட்டம் தமிழகத்தில் கோவை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 23-01-1955 முதல் மற்றும் சென்னை அதன் புற நகர்ப்பகுதிகளில் நவம்பர் 1955 முதலும் மற்றும் திருப்பூரில், நவம்பர் 1958 முதலும் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு இத்திட்டம் தமிழகத்தின் இதர தொழில் மையங்களில் படிப்படியாக அமலாக்கம் செய்யப்பட்டு தற்பொழுது குறைந்தது ஆயிரம் தொழிலாளர்கள் உள்ள முக்கிய தொழில் மையங்களுக்கு அமல் செய்யப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதிகளில் ஒன்றாக கோவை விளங்குகிறது. கோவை தென் இந்தியாவின் ஜவுளி தலைநகர் அல்லது தென்இந்தியாவின் "மான்செஸ்டர்" எனவும் அழைக்கப்படுகிறது. கோவை சார் மண்டல அலுவலகம் ஜனவரி 1990ல் துவக்கப்பட்டு, கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை தன்னகத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறது. கோவை சார் மண்டலத்தில் 28188 தொழிலதிபர்கள், 7 இலட்சம் காப்பீட்டாளர்கள் மற்றும் சுமார் 28 இலட்சம் பயனீட்டாளர்கள் இ.எஸ்.ஐ.திட்டப் பயன்களை பயன்படுத்தி வருகின்றனர். இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் 18 கிளை அலுவலகங்களின் மூலம் இப்பணப்பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மருத்துவப்பயன்கள் மாநில அரசின் கீழ் உள்ள 50 இ.எஸ்.ஐ. மருந்தகங்கள், 2 நடமாடும் மருந்தகங்கள் மற்றும் கோவை, சிங்காநல்லூர், வரதராஜபுரத்தில் 300 படுக்கை வசதிகள் கொண்ட ESI மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. 2016ல் எம்.பி.பி.எஸ். எனப்படும் மருத்துவப் பட்ட படிப்பு துவக்கப்பட்டு, இ.எஸ்.ஐ. பயனீட்டாளர்களுக்கு நவீன மருத்துவச் சிகிச்சை வழங்க கோவை இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் படிப்படியாக வசதிகள் செய்யப்பட்டு வருகின்றது. பணமில்லா உயர்தர மருத்துவச் சிகிச்சை பயனீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக கோவை மண்டலத்தில் போதிய அளவில் தனியார் மருத்துவமனைகள் இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷனால் தேர்ந்து பட்டியலிடப்பட்டிருக்கின்றன.



## இ.எஸ்.ஐ. பதிவு சந்தா செலுத்துதல் முதலியன

இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷனின் இணையதளத்தில் (www.esic.in) இ.எஸ்.ஐ. பதிவெண் பெற்ற தொழிலதிபர்கள், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியவுடன், இணைய தளத்தில் தொழிலாளர்களை பதிவு செய்ய வேண்டும். முதல் வேலை வாய்ப்பாக இருக்குமாயின், தொழிலாளர்கள் பற்றிய விபரங்கள், குடும்ப உறுப்பினர்கள், மருத்துவச் சிகிச்சைக்கான தேர்வு செய்யும் இ.எஸ்.ஐ. மருந்தகம் குறித்த விபரங்களை பதிவு செய்ய வேண்டும். பதிவுறுதல் முடிந்தவுடன், கணிணி வழியிலான காப்பீடு எண் (இன்ஷூரன்ஸ் நம்பர்) உருவாகும். இவ்வெண் தொழிலாளர்களின் ஆயுட்காலம் வரை அவர் வேலையை மாற்றிக் கொண்டாலும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டாலும் செல்லத்தக்கதாகும். ஏற்கனவே ஒரு தொழிலாளிக்கு இன்ஷூரன்ஸ் நம்பர் இருக்குமாயின் அதே எண்ணை உபயோகித்து விபரங்களை பதிவேற்ற வேண்டும், அவரை மீண்டும் மறுபதிவு செய்யக்கூடாது.

பதிவு முறைகள் குறித்த முழு தகவல்களை கீழ்க்காணும் தலைப்புகளின்படி www.esic.in இ.எஸ்.ஐ கார்ப்பரேஷனின் இணைய தளத்தில் காணலாம்.

i. தொழிலாளரின் பதிவு ii. புது இன்ஷூர் நபரின் (காப்பீட்டாளர்) பதிவு அல்லது ஏற்கனவே பதிவுற்றவர் iii. இன்ஷூர் நபரின் சம்பந்தப்பட்ட விபரங்கள் ஆதார் எண், குடும்ப உறுப்பினர்கள் ஆதார் எண் உட்பட தகவல்களை பூர்த்தி செய்து உறுதி-ஆவண படிவம் (DF) ஆக்குதல். iv.உறுதி-ஆவண படிவம் சமர்ப்பித்தல் v. இன்ஷூரன்ஸ் எண் உருவாக்குதல் vi.இ-பேஹச்சான் அட்டை உருவாக்குதல் (அடிச்சீட்டை பிரிண்ட் செய்தல்) vii. மாதாந்திர சந்தா செலுத்துதல்

## சமூகப் பாதுகாப்பு பயன்கள்

மருத்துவப் பயன்கள் மற்றும் பணப்பயன்கள் என இரு முக்கிய வகைப்படுத்தப்பட்டு, இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் சமூகப்பாதுகாப்பு பயன்கள் வழங்கப்படுகின்றன.

### மருத்துவப் பயன்

காப்பீடு செய்யப்பட்ட நாள் முதல், தேவைக்கு ஏற்ப, ஒரு தொழிலாளி மற்றும் அவரைச் சார்ந்தோரும் மருத்துவ வசதிகள் பெற தகுதி பெறுகின்றனர். இம் மருத்துவப்பயன், வெளிநோயாளி சிகிச்சை, வசிக்கும் இடத்தில் வந்து சிகிச்சையளித்தல், சிறப்பு மருத்துவ மற்றும் நோய் அறியும் சேவைகள், மருத்துவமனை உள்நோயாளி சிகிச்சை, உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சை, இலவச மருந்துகள் மற்றும் காயங்களுக்கான கட்டு கட்டுதல், செயற்கை உபகரணங்கள் மூலம் நோய் தடுப்பு செய்தல், உடல் பரிசோதனைகள் மற்றும் குடும்ப நல சேவைகள் முதலியனவற்றை கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் முதியோர் மருத்துவச் சேவை (இ.எஸ்.ஐ.மருத்துவமனை / மருந்தகங்களில் மட்டும்), ஓய்வு பெற்ற மற்றும் விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்கும் மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்கள் / அவர்களின் துணைவர்களுக்கும் (மனைவி/கணவர்) / நிரந்தர ஊன உதவி / சார்ந்தோர் உதவி தொகை பெறும் விதவைகளுக்கும் வருடம் ஒன்றிற்கு ரூபாய் 120 செலுத்தி இ.எஸ்.ஐ. மருத்துவ நிறுவனங்களில் மருத்துவப் பயன்கள் பெற்றுக் கொள்ளலாம்.

### பணப்பயன்கள்

இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் கிளை அலுவலகங்களின் வாயிலாக, ஊதிய இழப்பு அல்லது ஊதிய திறன் இழப்பு, நோய், மகப்பேறு, வேலை நிமித்தம் காரணமாக ஏற்பட்ட காயம் / ஊனம் அல்லது இறப்பு, போன்றவைகளுக்கு பணப்பயன்கள் வழங்கப்படுகின்றன. நோய்கால உதவித்தொகை, ஊன உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்/மருத்துவக்குழு சான்றளித்த பிறகு கொடுக்கப்படக்கூடியதாகும்.

தொழிற்சாலை மூடப்படுவதால் ஏற்படும் வேலை இழப்பு, வேலை குறைப்பு அல்லது 40% குறையாமல் வேலையின் காரணம் இன்றி ஏற்பட்ட நிரந்தர இயலாமை போன்றவைகள் நேரிடும் போது வேலை இழப்பு உதவித் தொகை கொடுக்கபடக்கூடியதாகும்.

### இதர பயன்கள் (இ.எஸ்.ஐ.மருத்துவக்கல்வி நிறுவனங்களில் காப்பீடு நபர்களின் குழந்தைகளுக்கு சேர்க்கைக்கான இட ஒதுக்கீடு வழங்குதல்)

இந்தியா முழுதும் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் மருத்துவ / பல் மருத்துவ கல்லூரிகளில் காப்பீட்டு நபர்களின் குழந்தைகளுக்கு எம்.பி.பி.எஸ் / பி.டி.எஸ். மருத்துவப் படிப்புக்கான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான தகுதி பெற சம்பந்தப்பட்ட கல்வியாண்டில் நீட் (NEET) தேர்வில் தரவரிசையில் இடம் பெற்றிருக்க வேண்டும். இதர தகுதிகளுக்கான நிபந்தனைகள் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் தலைமையகம் (மருத்துவ படிப்பு பிரிவு) மூலம் அவ்வப்பொழுது வெளியிடப்படும் வழிகாட்டுதலுக்கு ஏற்ப இருக்கும். இவைகள் (www.esic.nic.in) இணைய தளம் மூலம் வெளிப்படுத்தப்படும்.

## உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சை

உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சை பெற, காப்பீடு பெற்ற தொழிலாளி வேலையில் 3 மாதங்கள் பணிபுரிந்து, 39 நாட்களுக்குக்கான சந்தா செலுத்தி தனக்கு மற்றும் குடும்பக் காப்பீடு பெற வேலையில் 6 மாதங்கள் மற்றும் 78 நாட்களுக்கான சந்தா செலுத்தி இருக்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான தகுதிகள் காப்பீட்டு நபர் இணைய தளத்தின் வாயிலாக பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து கணகிடப்பட்டு நிர்ணயிக்கப்படும். இத்தகைய சிறப்பு மருத்துவச் சிகிச்சைகள் வசதி செய்யப்பட்டுள்ள சில இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் அல்லது இ.எஸ்.ஐ (PGIMSR) மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு மையங்களில் வழங்கப்படும் அல்லது இந்தியாவின் முன்னிலையில் உள்ள வரிசைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளில் ஆலோசனையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

## இணைய வழி சேவைகள்

இ.எஸ்.ஐ.கார்ப்பரேசன் இந்தி மற்றும் ஆங்கிலம் மொழிகளில் தகவல்கள் கொண்ட www.esic.nic.in எனும் இணைய தளம், மற்றும் காப்பீடு சேவைகளுக்கான www.esic.in எனும் இணையதள சேவைகளை முற்றிலுமாக இயங்கும் வகையில் செயல்படுத்தி வருகிறது. கீழ்க் காணும் இணைய தள சேவைகளை தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

i. தொழிலதிபர்கள்; & தொழிலாளர்கள் பதிவு ii. காப்பீட்டு நபர்களின் இ-பேச்சான் அட்டைகளை உருவாக்குதல் iii. தொழிலதிபர்கள் சந்தா தொகை செலுத்த ஏதுவாக செலுத்துச்சீட்டு (சலான்) உருவாக்கி இணையதள ஆன்லைன் மூலமாக சந்தா செலுத்துதல் iv. கிளை அலுவலகங்களில் பணப்பயன்கள் பெறுதல் v. இ.எஸ்.ஐ.மருந்தகங்கள் மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் மருத்துவச்சிகிச்சை வசதிகள் பெற்றுக்கொள்ளுதல் vi. எந்நேரத்திலும் & எங்கிருந்தாலும் இணையதளம் மூலம் குறைகளை பதிவு செய்தலும், குறைதீர் பெற்றுக் கொள்ளுதலும். vii. CPGRAM, இந்திய அரசின் இணைய தளங்கள் http://pgportal.gov.in மற்றும் http:/helpline.rb.nic.in" வாயிலாக, பொதுமக்கள் தங்கள் குறைகளுக்கான தீர்வு பெற பதிவு செய்யலாம். viii. மின்னனு மருத்துவ சிகிச்சை பதிவு (Electronic Health Record)

## ஐ.பி. (I.P.) போர்ட்டல் (காப்பீட்டு நபர்களின் தளம்)

ஒரே ஒரு "கிளிக்" மூலம் அனைத்து தகவல்களையும் பெற:

• www.esic.in என்ற போர்ட்டலில் login செய்யவும். • இடது புறம் கீழே உள்ள ஐ.பி.போர்ட்டலில் (IP Portal link) கிளிக் செய்யவும் • உங்களின் காப்பீட்டு எண்ணை "உபயோகிப்பவர் பெயர்" கட்டத்தில் நிரப்புவும். • "login" கிளிக் செய்யவும் • உங்களின் மற்றும் உங்கள் குடும்பத்தினரின் முழு விபரங்கள், இ.எஸ்.ஐ.திட்டப் பயன்களுக்கான தகுதிகள், உங்களின் சம்பளம் மற்றும் சந்தா விபரங்கள், கோரிக்கையின் நிலைகள் போன்ற அனைத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

## தொழிலதிபர்களின் கவனத்திற்கு

- இ.எஸ்.ஐ.சட்டத்தின்படி தகுதி பெற்றவுடன் தனது தொழிற்சாலை/ நிறுவனத்தை www.esic.in என்ற இணையம் வாயிலாக ஆன்லைன் மூலம் தொழிலதிபர்கள் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும் பொழுதோ அல்லது அதற்குப் பிறகோ எவ்விதமான எழுத்துப்பூர்வமான ஆவணங்கள் தேவையில்லை. கோடு எண் (தொழிலதிபர்களுக்கான தொகுப்பு எண்) மூலம் கணிணி வாயிலாக உருவாக்கப்படும் படிவம் C-11 பதிவு செய்த நிலையில் தொழிலதிபர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். படிவம் C-11 இ.எஸ்.ஐ.சி. அதிகாரிகளால் உறுதிப்படுத்த வேண்டியதில்லை. மேற்படி பதிவிற்கான எவ்வித ஆவணங்களும் இ.எஸ்.ஐ.கார்ப்பரேஷனுக்கு சமர்ப்பிக்க வேண்டியதில்லை.
- ESI திட்டத்தின் கீழ் பதிவு செய்த் தொழிலதிபர்கள் தம் தொழிலாளர்களையும், முகவர்கள் மூலம் அமர்த்தப்பட்ட தொழிலாளர்களையும் ஆன்லைன் மூலமாக பதிவு செய்த பிறகு இ-பெஹச்சான் அட்டைகளுடன் ஆதார் எண்களை இணைத்து மருத்துவப் பயன்கள் பெற்றுக் கொள்ள நிரந்தர அடையாள அட்டையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



- ஒரு தொழிலாளி வேறு ஒரு தொழிலதிபரிடம் வேலைக்கு புதிதாக சேர்ந்தால் அவரின் பழைய இன்ஷூரன்ஸ் எண்ணைத்தான் தொடர வேண்டுமேயன்றி புதிய தொழிலாளி எண் மீண்டும் பதிவு செய்யக்கூடாது.
- ஆதார் எண்ணை ஐ.பி.எண்ணுடன் இணைக்கவில்லையெனில் கணினி வழியாக 'தற்காலிக அடையாள அட்டை' உருவாக்கி காப்பீடு நபரின் குடும்ப குழு புகைப்படம் ஒட்டப்பட்டு தொழிலதிபரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் பெற்று உபயோகிக்கலாம். ஆதார் எண்ணை இணைக்க முடியாமல் அல்லது தொழில் நுட்ப கோளாறு தற்காலிகமாக இருப்பின் இம்முறையை பயன்படுத்தலாம்.
- தொழிலதிபர்கள் தொழிலாளர்கள் வங்கி கணக்கை துவக்க உதவ வேண்டும், ஏனெனில் அனைத்து பண பயன்களும் நேரிடையாக தொழிலாளர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- தொழிற்சாலை நிறுவனம் நிரந்தரமாக மூடப்பட்டாலோ அல்லது உரிமை மாற்றம் நேரிடின் 21 நாட்களுக்குள் சார் மண்டல அலுவலகத்திற்கு தொழிலதிபர்கள் அத்தகைய மூடப்படுதல் மாறுதலை உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

## தொழிலாளர்கள் கவனத்திற்கு :

- வேலையில் சேரும்பொழுது, வேலையை மாற்றிக் கொள்ளும் பொழுது இன்ஷூரன்ஸ் (காப்பீடு) எண் முன்பே இருக்குமாயின் உங்கள் புதிய தொழிலதிபரிடம் தெரிவிக்கவும்.
- சில பயன்கள் உங்களின் சேவைக் காலத்தின் அடிப்படையிலும் சந்தா செலுத்தியதின் அடிப்படையிலும், வழங்கப்படுகின்றன. எனவே, நடப்பில் உள்ள இ.எஸ்.ஐ.சி இன்ஷூரன்ஸ் பதிவு, அத்தகைய அதிகரிக்கப்பட்ட பயன்கள் மற்றும் சந்தா செலுத்தியதின் பேரில் வழங்கப்படும் பயன்கள் பெறும் தகுதிகளை பெற்றுத் தரும்.
- தொழிலகம் / தொழில் மாற்றம் ஏற்படுகையிலும் இதர பயன்கள் தொடர்ந்து பெற கைவசம் உள்ள இ.எஸ்.ஐ.சி இன்ஷூரன்ஸ் எண்ணை தொடர்ந்து உபயோகிக்கலாம்.
- அடையாள அட்டையுடன் ஆதார் அட்டையை இணைத்து மருத்துவ பயன்களை சுலபமாக பெற்றுக் கொள்ளலாம்.
- இன்ஷூர் நபர் மற்றும் அவரின் குடும்பத்தினர் ஆதார் எண்களை ww.esic.in இணைய தளத்தில் உள்ள ஐ.பி.போர்ட்டல் மூலம் இணைத்துக் கொள்ளலாம். ஆதார் எண்களை இணைத்த பின் தொழிலதிபர்களால் வழங்கப்படும் இ.பெஹச்சான் அட்டையை நிரந்தர அடையாள அட்டையாக பயன்கள் பெற்றுக் கொள்ள தகுதியுள்ள காலம் வரை பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இ.எஸ்.ஐ. காப்பீட்டு எண்ணுடன் ஆதார் எண்களை இணைக்கப் பெறாதவர்கள். அரசால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் தொழில் நிறுவனம் வழங்கும் தற்காலிக அடையாள அட்டையை காண்பித்து இ.எஸ்.ஐ. மருத்துவமனை, மருந்தகங்களில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் இ.பெஹச்சான் அட்டை நிரந்தரமானது. தொழில் மாற்றம், தொழிலதிபர் மாற்றம் இருந்தாலும் நிரந்தரமானது. வேலை மாற்றம் செய்யும்போது உங்கள் இ.பெஹச்சான் அட்டை காப்பீடு எண்ணை உங்களின் புதிய தொழிலதிபருக்கு தெரிவிக்க வேண்டும்.
- உங்களுக்கு உடனடியாக சேவையளித்திடவும், உரிய தகவலளிக்கவும், உங்கள் தொழிலதிபர்கள் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பொருட்டும் உங்கள் அலைபேசி, தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி மற்றும் குடும்பத்தினர் பற்றிய விவரங்கள் அனைத்தையும் வேலை பார்க்கும் நிறுவனத்தில் தெரிவித்து விட வேண்டும்.

| | |
|---|---|
| 1. சந்தா பங்கு, நிதி ஆதாரம் | தொழிலாளிகள் - மொத்த ஊதியத்தில் 1.75%, தொழிலாளர்கள் - மொத்த ஊதியத்தில் 4.75% ஆக - மொத்த ஊதியத்தில் 6.5% (அனைத்து படி மற்றும் மிகை நேர ஊதியம் உள்பட). |
| 2. இ.எஸ்.ஐ. காப்பீட்டுக்கான ஊதிய உச்சவரம்பு | ரூ.21,000/- (மிகை நேர ஊதியம் ஊதிய உச்சவரம்புக்கு பொருந்தாது ஆயினும் சந்தா செலுத்துவதற்கு மிகை ஊதியம் கணக்கில் கொள்ள வேண்டும்) |
| 3. தமது பங்களிப்பு சந்தாத் தொகை யிலிருந்து விலக்குப் பெற்ற தொழிலாளர்கள் | 01.06.2010 முதல் தினசரி சராசரி ஊதியம் ரூ.100/- வரை பெறும் தொழிலாளிகள் விலக்கு பெறவர் ஆனால், தொழிலதிபர்கள் தமது பங்களிப்பு 4.75% செலுத்த வேண்டும். |
| 4. சந்தா செலுத்துவதற்கான காலக் கெடு | அடுத்த மாதத்தின் 21ம் நாள் |
| 5. இ.எஸ்.ஐ. சந்தா செலுத்த ஏற்படும் கால தாமதத்திற்கான தண்டனைகள். | வட்டி:12% வரை.<br>இழப்பீடு 5% முதல் 25% வரை |
| 6. குற்ற வழக்கு நடவடிக்கை | 5 வருடம் வரை சிறை தண்டனை & 25,000/- அபராதம். (இ.எஸ்.ஐ. கார்ப்பரேசனின் வசூல் அதிகாரியினால் வருமான வரிச் சான்று சட்டம் 1961 அட்டவணை II & III உள்ள அனைத்து அதிகாரங்களின் படி வசூல் நடவடிக்கை). |